01.10.2020
இதழ்-02

அதிர்ஷ்டத்தை அறிவதற்கு

அட்சய லக்ன பத்ததி

ஆசிரியர் : சி.பொதுவுடைமூர்த்தி

அற்புதத்தை உணரவைக்கும் அட்சய லக்ன பத்ததி

ரூபேஸ் செல்வராஜ்
BANGALORE.

திருமண கால நிர்ணயமும் அட்சய லக்ன பத்ததியும்

திருமலை கேசவன்
கள்ளக்குறிச்சி.



www.alpastrology.com | ALPAIR FOUNDATION
smoorthyjothidar@gmail.com | Sasti Tv | ALP Astrology
+91 7010074415 | +91 9786556156

ALPAIR FOUNDATION

ATCHAYA LAGNA PATHATHI ASTROLOGY INTERNATIONAL RESEARCH FOUNDATION

அட்சய லக்ன பத்ததி

நூல் ஆசிரியர்

சி.பொதுவுடைமூர்த்தி

இணை ஆசிரியர்

R.சாந்திதேவி

ராஜேஷ்குமார்

அனுஷா

ரூபேஷ்

விஜயராஜ்

சத்யநாராயணன்

தொலைபேசி

97865 56156

70101 85656

70100 74415

99407 71415

மின்னஞ்சல்

smoorthyjothidar@gmail.com

இணையத்தளம்

www.alpastrology.com

ஜோதிட சான்றோர்களுக்கு வணக்கம்

எனக்கு கிடைத்த ஜோதிட அனுபவ முறையில் எனக்கு கிடைத்த ஒரு சில விஷயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஒவ்வொரு மாதமும் அட்சய லக்ன பத்ததி இணைய இதழ் வெளிவருகிறது இந்த இதழின் நோக்கம் நாம் கற்ற கல்வியை நாம் பெற்ற அனுபவத்தை மற்றவர்களும் பயன்பெற வேண்டும் மற்றவர்களுக்கும் அதை அனுபவிக்க வேண்டும் மற்றொரு ஆய்வு செய்ய வேண்டும் என நோக்கத்தோடு இந்த இணைய இதழ் வெளியிடப்படுகிறது இந்த இணைய இதழ் மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் இலவச இணைப்பாக அளிக்கப்படுகிறது அட்சய லக்ன பத்ததி ஆல்பேர் பவுண்டேஷன் மூலமாக இந்த நூல் இந்த இணைய இதழ் வெளிவருகிறது உங்களுடைய சந்தேகங்களை உங்களுடைய கேள்வி பதில்கள் உங்களுடைய கட்டுரைகள் நீங்கள் அட்சய லக்ன பத்ததி ஆய்வு செய்தது கருத்துக்கள் இதில் பதிவு செய்ய வேண்டுகிறேன்.

அன்புடன்

சி.பொதுவுடைமூர்த்தி

உ

திருமண கால நிர்ணயமும் அட்சய லக்ன பத்ததியும்

ஸ்ரீ குருப்யோ நம:

உலகில் பல அதியசங்கள் நிகழ்ந்துள்ளன. ஜோதிடத்தில் கால நிர்ணயம் (நேரம்) பற்றி பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூறினார்கள். உதாரணமாக ஆண்காலம், பெண்காலம் என்றும் குழந்தை பிறப்பு பற்றியும் பல நூல்கள் இருந்தன.ஆனால் ஜாதகர் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளை முனிவர்கள், ஞானிகள் காலக்கண்ணாடி போல் (உதாரணமாக இப்பொழுது நாம் தொலைக்காட்சி, தொலைபேசியில் உலக நிகழ்வுகளைப் பார்ப்பது போல்) தவ வலிமையால் வெற்றிலையில் மை தடவி பார்த்து வர்ணனையாக கூறுவார்கள் என்று இதிகச புராணங்களில் படித்துள்ளோம்.

கலியுகத்தில் நமது குருஜி வாக்குயோகி, கலியுகஞானி **சி.பொதுவுடைமூர்த்தி** ஐயா அவர்கள் உருவாக்கிய அட்சய லக்ன பத்ததி (ALPமுறை) மென்பொருள் மூலம் ஒரு ஜாதகத்தில் பிறந்த நேரம், ,மற்றும் அவரது வாழ்வில் நடந்த நிகழ்வுகளின் கால நேரத்தைச் சற்று முன்னே பின்னே சரி செய்யும் வசதியுடனும் அதன் பிறகு அவர் வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை நம்மால் மிக துல்லியமாக கூற

முடிகிறது.இந்த அட்சய லக்ன பத்ததி குருஜியின் முயற்சியால் நமக்கெல்லாம் கிடைத்த ஒரு பொக்கிஷம்.

நான் ஜாதகரின் நேரத்தை சரி செய்து பலன் கூறியதால், ஜாதகர் வாழ்வில்கூறியபடி மிகச்சரியாக நடந்தது.இதனால் நானும் ALP ஜோதிடர் என்பதில் பெருமை கொள்கிறேன்.

ALP ஜோதிடர்
V.திருமலைகேசவன்
ஸ்ரீ: ஜோதிட ஆய்வகம்
கள்ளக்குறிச்சி
9786868144.

உ



ஜாதகர் வயது : 37 வயது
ஜாதகர் பிறந்த தேதி : 17.11.1983
ஜாதகர் பிறந்த நேரம்:03.08 PM
ஜாதகர் பிறந்த ஊர்: துறையூர்.

ஜென்ம லக்னம் : மீனம்
ஜென்ம நட்சத்திரம் : ரேவதி

ALP லக்னம் : கடகம்
ALP நட்சத்திரம் : பூசம் 2ம் பாதம்

கேள்வி : திருமணம் சம்பந்தமாக

அட்சய லக்ன பத்ததி (ALP)கடகம் புள்ளி பூசம் 2
06.06.2020 முதல் 16.07.2021 வரை
ஜாதகம் பார்த்த தேதி : 13.06.2020
ஜாதகருக்கு தற்போழுது திருமண நேரம் வந்துவிட்டது என்று கூறினோம். விளக்கம், ALP கடகம், ALP புள்ளி பூசம் 2ல் ஜென்ம லக்னத்தின் 7ஆம் பாவகத்தில் செல்ல திடீரென்று 25 நாட்களில் திருமணம் நடந்தது.ALP லக்னாதிபதி சந்திர பகவான் ALPக்கு 9-ல், ALPக்கு 3-ல் உயிர் புள்ளி, பூசம் 2 கன்னியை தொட சனிபகவான்

ALPக்கு 4ல் உச்சம். ALP அதிபதி சந்திரபகவானுக்கு 8ல். அதனால் திடீர் திருமணம்.
திருமண தேதி : 02.07.2020 வியாழக்கிழமை ஆனிமாதம் அனுஷ நட்சத்திரம், கடக லக்னத்தில் திருமணம் நடைபெற்றது.

<u>ALP –யின் சிறப்பு :</u>

ஜாதகர் மனைவி நட்சத்திரம் அவிட்டம்.
ஜென்ம லக்னத்திற்க்கு 7ல் செவ்வாய் பகவான், ALP புள்ளி தொட மனைவி நட்சத்திரம் அவிட்டம்.
ALP புள்ளி பூசம் என்பதால் திருமணம் தின நட்சத்திரம் அனுஷம். ALP கடகம் என்பதால் கடக லக்னத்தில் திருமணம் நடந்தது.ஜென்ம லக்னம் மீனம் என்பதால் வியாழக்கிழமை திருமணம்.
ALP புள்ளி பூசம் 06.06.2020 முதல் 21.07.2020 வரை சனிபகவான் – சனிபகவான் ஜாதகத்தில் சனிபகவான் துலாத்தில் உச்சம்.ஆதலால் சிறப்பாக திருமணம் நடந்தது. இதன் மூலம் , ALP –யின் அற்புதத்தை உணர்ந்தேன். நானும் ALP ஜோதிடர் என்பதில் பெருமை கொள்கிறேன்.

ALP ஜோதிடர்
V.திருமலைகேசவன்
ஸ்ரீ: ஜோதிட ஆய்வகம்
கள்ளக்குறிச்சி
9786868144.

உ

அட்சய லக்ன பத்ததி

அட்சய லக்னம்,
அட்சய ராசி அறிமுக வகுப்பு

2 நாட்கள் மட்டும்
03.10.2020 முதல் 04.10.2020

இடம்:
Yoga Maya Natural Health, 47c Alagesan Road, Sai Baba Colony,
Coimbatore 641011.

முன்பதிவு அவசியம்

9786556156 - 7010074415

ALPAIR FOUNDATION
www.alpastrology.com
smoorthyjothidar@gmail.com

அன்பான வாசகர்களே!



கீழ்காணும் ஜாதகர் தன்னுடைய நடந்துமுடிந்த சொத்து பதிவு சம்பந்தமான விவரத்தை என்னிடம் கூறிய அவ்வேளையில் தனது காலங்சென்ற கணவரின் மறைவை பற்றியும் வருத்தத்தோடு கூறினார்.

மறைந்த அவரது கணவரின் தேதி, நேரத்தின் துணையோடு இவரது ஜாதகத்தினை அட்சய லக்ன பத்ததி மூலம் ஆய்வு செய்யும் போது கிரகங்கள் விளைவுகள், பாவங்கள், தசா-புக்தி இணைவுகள், கோச்சாரங்களின் நிகழ்வுகள் அனைத்தும் ஒருவித மனக்கண்ணை திறந்து காட்டும் காலக்கண்ணாடியாக இருந்தது எனக்கு.

ஜாதகரின் ஜென்ம லக்னம் தனுசு, மேஷ ராசி, அஸ்வினி நட்சத்திரத்தில் பிறந்தவர்.

கணவர் மறைந்த நாளன்று அட்சய லக்னம் ரிஷப லக்னமாகவும், அட்சய லக்ன புள்ளி ரோகிணி 3 ம் பாதகமாகவும் மிதுன நவாம்சத்தில் இயக்கிகொண்டுள்ளது.

அட்சய லக்ன ஆய்வு:

ALP லக்னம் ரிஷபத்திலும், D9 ரோகிணி 3 ம் பாதம் மிதுனத்திலும், சந்திரன் ALPலக்னத்திற்கு 3 லும்

இயங்குகிறது. இங்கு ALP லக்னம் ஜென்ம லக்னத்திற்கு (தனுசு) 6லும், D9 புள்ளி அதிபதி சந்திரன்(கடகம்) வீடு ஜென்ம லக்னத்திற்கு 8 லும், சந்திர பகவான் ALP க்கு 12 இயங்குகிறதை காண முடிகிறது. அதாவது ALPக்கு

12ம்மிடத்தில் மேஷராசியில் ALP க்கு, 3 மிடத்து சந்திரன் இருப்பது தீர்க்கமான முடிவை எடுக்கவல்லதாக இருக்கிறது.

இந்த ஜாதகத்தை உற்று நோக்கும்போது கணவரின் இறப்புக்கான சரியான கிரக அமைப்பு ஜாதகத்தில் 7 ஆம் பாவத்தை சுட்டி காட்டுகிறது.

ALP லக்னத்திற்கு நேரெதிர் 7 ஆம் பாவம்(கணவர்) விருச்சிகம் ராசி. அதன் அதிபதி செவ்வாய் பகவான் விருச்சிகத்திற்கு 8 ஆம் இடத்தில் மிதுன ராசியில் உள்ளது. (8 மிடம் ஆயுள் பாவம்)

மேலும் ALP லக்னத்திற்கு பாதகாதிபதி சனிபகவான், மிதுனத்தில் 7 ஆம் அதிபதி செவ்வாய் பகவானுடன் இருப்பதால்,. இந்த இரு கிரகங்களின் கூட்டு நிகழ்வு பாதகாதிபதி தன் வேலையை செவ்வாயின் மீது இக்கால கட்டத்தில்

ஜாதகரின் கணவருக்கு எதிர்மறை விளைவை கொடுக்கவல்லது என்பதை உணர முடிகிறது.

ALP லக்ன புள்ளி D9 ஆய்வு:

D9 ரோகினி 3 பாதம் மிதுன ராசியை செயல்படுத்துவதாலும், ALP லக்னதிற்கு களத்திர பாவமான விருச்சிக ராசிக்கு எட்டாமிடமாக அமைந்துள்ளதாலும் எட்டாமிடம் இக்காலகட்டத்தில் ஆயுள் பங்கம் ஏற்பட வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது, இங்கு நாம் கவனிக்க வேண்டியது ALP க்கு இரண்டாமிடம் இயங்குவதால் இவருக்கு (சனி பாக்கியாதிபதி ALPக்கு) சொத்து வரவு அல்லது வீட்டுக்கு/குடும்பத்திற்கு உரிமையாளராகும்/ பாக்கியத்தை அமைத்து தந்துள்ளது. எனவே ஜாதகர் சொத்து பதிவு செய்திருக்கிறார்.

அட்சய ராசி ஆய்வு:

அட்சய ராசி விம்சோத்திரி தசா புத்திமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஜாதகரின் ARP மிதுன ராசியில் அமைந்துள்ளது. தற்போது ராகு தசாவில் குருபுக்தி நடந்து கொண்டுள்ளது. தசாநாதன் ராகுபகவான் புதன் சாரத்தில் (கேட்டை) ARP க்கு 6 இல் இருந்தும் புக்தி நாதன் குருபகவான் ALP க்கு 8 லும், ARP க்கு பாதகாதிபதியாக குருபகவான் இருந்து தசா/புக்தி நடத்துவதால் இவருக்கு எதிர்பாராத மனஉளைச்சலால் குடும்பத்தில் எதிர்மறை எண்ணங்கள் இந்நிகழ்வுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

இறப்புக்கு தசாபுக்திநாதன் ஒரு காரணமாகவும் இருந்திருக்கிறது.

ராகு (பகவானுடன் விருச்சிகத்தில் மாந்தி இருப்பதால் களத்திரபாவத்திற்கு இழப்பு ஏற்படும் அமைப்பாகவும் உள்ளது)

குரு(பகவான் ALP க்கு 8/11 குடையவனாகி களத்திர காரகனாகிய சுக்கிரனுடன் இருப்பதும், 8 ஆம் அதிபதியான குருச்சாரம் பெற்ற சுக்கிரன்(பூரட்டாதி1) உடன் இருப்பதாலும், ARP க்கு பாதகாதிபதியான குருவுடன் சுக்கிரன் இருப்பதாலும் குருபுக்தியில் களத்திரத்திற்கு பாதகத்தை உண்டுபண்ணியது).சனி(பகவான் பாதகாதிபதியாக ALP க்கு எட்டாம் அதிபதியாகி , ஏழாம் அதிபதி செவ்வாயுடன் ARP வுடன் இருப்பதும்)

கேது (பகவான் ALP வுடன் இருந்து ஏழாம் பார்வையாக களத்திரபாவத்திற்கு தடையை ஏற்படுத்தியதும்)

சுக்கிர (பகவான் ALPக்கு 1/6 க்கு அதிபதியாகி எட்டாம் அதிபதியுடன் இணைவு)

<u>அட்சய பாவம் ஆய்வு:</u>

இந்நிகழ்வு நடைபெற்ற தேதி காலங்களை ஆய்வு செய்யும் போது அட்சய பாவம் ஆறில் இயங்குகிறது. இது ALP லக்னத்திற்கு ஆறிலும் கணவரது களத்திரராசிக்கு 12லும் இயங்குவதை அறிய முடிகிறது. மேலும் அட்சய பாவம் விசாகம் 2ல் இயங்குவதாலும், விசாகத்தின் அதிபதி குருபகவான் ALPக்கு 8/11 குரியவாராகி குடும்பத்திற்கு

லாபஸ்தானத்தை/சந்தோஷத்தை தடை செய்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அட்சய பாவ ஆய்வு மூலம் அறிய முடிகிறது.

அட்சய பாவ நட்சத்திர ஆய்வு:

கணவரின் இழப்பை குறிப்பிடுள்ள தேதியில், அட்சய பாவ நட்சத்திரத்தின்படி ஆய்வு செய்யும் போது, ALP க்கு ஏழாமிடத்து விருச்சிகத்திலுள்ள கேட்டை நட்சத்திராதிபதி புதன், விருச்சிகத்திற்கு 8/11க்குடையவானாகி, விருச்சிகத்திற்கு ஐந்தாமிடத்தில் அமர்ந்தும் அப்புதனை பாதகாதிபதியாகிய சனிபகவான் தனது பத்தாம் பார்வையாக புதனை பார்வை செய்ததால் பூர்வ புண்ணியத்தை பாதித்தும், ALP ஜாதகரின் லாபஸ்தானத்தை தடைசெய்துவிட்டது.

கோச்சார கிரக ஆய்வு:

இந் நிகழ்வு நடந்த தேதி மற்றும் நேரத்தின் படி ஜென்ம லக்னம் மற்றும் ALP லக்னமும் கோச்சாரத்தில் மூலம் சரிபார்க்கபட்ட விவரம்

ALP லக்னத்திற்கு எட்டாம் அதிபதி குருவும், ஜென்ம லக்னத்தின் எட்டாம் அதிபதி சந்திரனையும், அன்றைய கோச்சாரத்தில் சந்திரனை(கன்னி), ஒன்பதாம் பார்வையாக குரு(மகரம்) பார்வை செய்வதை காணலாம். மேலும் எட்டாமிடத்தின் பன்னிரெண்டாம் அதிபதி தான் ஏழாம் அதிபதி .எனவே களத்திரஸ்தானதிபதியின் நிகழ்வுகளை நிர்ணயிப்பது எட்டாம் அதிபதியே. இந்த ஜாதகத்தில் ஏழாமிடத்தின்

தடைகள், ஆயுள் அனைத்தும் எட்டாம் அதிபதியே சுட்டிக்காட்டியது. மேலும் வாசகர்கள் இதில் ஏதேனும் கருத்துக்களை சுட்டி காட்டவிரும்பினால் சுதந்திரமாக பதிவு செய்யவும்.

<u>ஆங்கில பதிவு:</u>

திரு. எஸ்.கே. ரூபேஸ்,
ALP Astrology Practitioner. Bangalore.

<u>தமிழாக்கம்:</u>

திரு.இ.விஜயராஜ்,
ALP Astrology Practitioner.
AMBUR
email:alpvijay20@gmail.com
cell: 9443203704

(தொடர்ச்சி ஆய்வு ஜோதிட கட்டங்கள்)



Hi Readers,

The below horoscope is of a natal, who approached me regarding her new registered property which happened to her very recently with the same approach she also stated me about sad demise of her husband which happened too recently. When the horoscope was analyzed by considering the date of demise we can come across an eye opening effects of planets , bava's, Dasha-Bukti etc with respect to ALP astrology. The natal was born in Dhanusu lagna / Sagittarius ascendant and the Rashi / Zodiac is Mesha/ Aries in Ashiwini nakshatra and the ALP activation as on the demise date of her husband was Vrishaba lagna in Rohini 3p which activates Mithuna lagna.

ALP lagna analysis

The ALP lagna is activated in Vrishaba lagna in Rohini nakshatra which becomes the activation of 6th house from janma lagna (Dhanusu lagna) indicating the natal will be subjected to effects of 6th house at this time period as the activation nakshatra is also Rohini whose lord Moon becomes the 3rd lord for ALP and present is in 12th house i,e in mesha rashi indicating a strong effects of 12th house too in the matters of 3rd bava on the natal. When the natal horoscope is observed in the matter relating to the demise event of her husband it reveals a clear effects of planets on the natal and also on the 7th house (House of Spouse). The 7th bava for ALP which is Vrischika rashi and its lord mars is placed in 8th house i,e in Mithuna rashi (8th house from Vrischika rashi) indicating an hazard in the

matter of spouse, parallely as a supporting stand the mars is placed with Shani who becomes the badhaka lord for vrishaba lagna confirming that this natal will be facing a strong negative impact in the matter of spouse at this time period.

ALP D9 analysis

Mithuna lagna is the rashi which gets activated at Rohini 3p which becomes the 8th house to vrischika rashi (7th bava to ALP lagnaa) indicating the effects of 8th house to the natal spouse at this time period, on an other hand activation of mithuna rashi which in turn becomes the activation of 2nd house for the natal to enjoy comforts of second house leading to become the owner of new property.

ARP analysis

The ARP analysis solely depends on the Vimshotari Dasha bhukthi, hence here the present ARP for this natal is in Mithuna rashi indicating the Dasha of Rahu and bukthi of Jupiter, here planet rahu is in the essence of mercury (Rahu placed in Jyesta nakshatra) is placed in 6th house to ARP i,e is vrischika rashi indicating that the natal would undergo a severe unexpected mental stress during the rahu dasha and the functioning bhukti is of Jupiter who becomes the 8th lord for ALP and the bhadhaka lord for ARP indicating the happening for negative event in the family. Dasha - Bthukti influence at the time of event: Rahu - (Placed in 7th house with mandi indicating the occurance of an hazard event with related to Spouse), Jupiter - (Becomes the 8th lord for ALP lagna and is placed with kalatra karaka venus boosting

the effects of 8th lord on venus), Saturn - (The Bhadhaka lord for the ALP lagna plaaced with the 7th lord), Ketu - (planet of detachment placed in the ALP lagna and aspecting the 7th house completely blocking the effects of 7th for the natal), Venus - (the lagna and the sixth lord is placed with 8th lord jupiter).

Akshaya Bava Aanalysis

By looking at the time and date of the event we can clearly see the activation of 6th bava to ALP which becomes the 12th bava to 7th house confirming that during this time period the natal will suffer from the matters of spouse and 7th bava. The akshaya bava is getting activated in the star Vishaka whose lord jupiter becomes the 8th and 11th lord for the ALP lagna blocking the gains from family.

Akshaya Bava Nakshatra Aanalysis

Checking on only for the matter of loss of husband for this natal ass on demise date, we can clearly see the activation of Jesta nakshatra in the 7th bava whose lord mercury becomes the 8th and 11th bava lords to ALP 7th bava and is placed in 5th house with the aspect of bhadhaka planet Saturn.thus nullifying the effects of 5th house placement of mercury also blocking the gains from spouse.

Transit analysis

Checking the transit on the date and time of event with respect to both Janma and ALP lagna. Very crystal clearly we can observe the aspects of 8th

lords of both Janma and ALP lagna on the date of event i,e the aspect of 8th lord jupiter for ALP lagna aspecting the 8th Lord moon for janma lagna. 8th lords are considered here for the fact that they become the 12th lords for 7th house.

List of Charts for Observation

Readers are requested to acknowledge this above content and also feel free to post your comments.

Thank You,

Roopesh SK

ALP Astrology Practitioner.

Bangalore.

- பிறப்பு: 30 -9 - 1992
- இரவு: 8:15
- ஊர் :புதுக்கோட்டை



- திருமணத்தைப் பற்றிய கேள்வி?
- நடப்பு வயது : 27 - 11- 7 நாள்
- ஜாதகம் பார்த்த நாள் :7 -9 - 20
- ALP பூசம் 4ம் பாதம்,
- ARP பூசம் 1ஆம் பாதம்,

1.அட்சய லக்னம் கடகம்.

2.அட்சய ராசி புள்ளி விருச்சிகம்.

3. ALPக்கு 5ல் சந்திரன் நீச்சம் ஆக இருப்பதால் தனக்கு பிடித்த பெண் அமையவில்லை.

4. ALPக்கு 4ம் பாவத்தில் துலாம் வீட்டில் சுக்கிரன் இருப்பதால் 1,4, 7, 10 பாவம் நிகழ்கால பாவம்.

5.சென்ற வருடம் கார் வாங்கியிருப்பீர்கள் என்றேன். ஆமாம் என்றார்.

6. ஜூன் மாதம் ஒரு வரன் வந்திருக்க வேண்டும். (or) மறுபடியும் இன்னொரு கார் வாங்கி இருக்கிறீர்களா என்று கேட்டேன். ஆமாம்.

7. கோச்சாரத்தில் கடகத்தில் சுக்கிரன் இருப்பதால் சாம்பல் கலர் கார் வாங்கினீங்களா என்று கேட்டேன். ஆமாம் என்றார்.

8. ஜெனன கால சந்திரன் துலாத்தில் இருப்பதால், சுக்கிரன் சுவாதி நட்சத்திரத்தில் இருப்பதால் சுக்கிரன் வருடம் 20 சுவாதி இரண்டாம் பாதம் 2 லட்சத்து 20 ஆயிரம்க்கு கார் வாங்கி இருப்பீர்கள் என்றேன். ஆமாம் என்று ஒப்புக் கொண்டார்.

9. வரும் கார்த்திகை மாதம் துலாத்திற்கு கார்த்திகை சுக்கிரன் 17ம் தேதிக்கு மேல் வருவார்.அப்பொழுது திடீர் அதிர்ஷ்டம் உண்டு என்றேன். காரணம் சனி 10ம் பார்வையாக பார்ப்பதால் கிடைக்கும் என்றேன்.சனி துலாம் வீட்டைப் பார்ப்பதால் 7 க்கு 7, ALP க்கு 7,லக்னத்துக்கு 7ஆம் பாவம்.

10.இதைவிட்டால் 29 வயது முடிந்து முப்பது வயது வரும்பொழுது ALP ஆயில்யம் 2ம் பாதம் வரும் பொழுது கண்டிப்பாக திருமணம் நடக்கும் என்று கூறினேன்.

11.ALP லக்ன புள்ளி விருச்சிகத்தில் சந்திரன் இருப்பதால் பூர்வீக சொத்து சட்ட சிக்கலில் உள்ளது என்றேன்.

12.நடப்பு திசை கேது திசையில் கேது புத்தி கேது இருப்பது மிருகசீரிஷம் சாரம் வாங்கி இருக்கிறது.

13.ஜாதகர் பிறந்த நட்சத்திரம் அனுஷம் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் இருப்பதால்,16வது நட்சத்திரமாக வருவதால்,

14.லக்னத்திற்கு 8ம் வீடு விருச்சிகம் விருச்சிகத்திற்கு 8ம் வீடு மிதுனத்தில் செவ்வாய் இருப்பதால் 8க்கு 8 ஒரு ரகசியம் சொல்கிறது.

15. ALP 12-ல் திசை புத்தி இருப்பதால் ரத்த உறவில் பிரிவினையோ (or) சகோதர கருத்து வேறுபாடு கண்டிப்பாக இருக்கும் என்றேன். ஆமாம் என்றார்.

16.அப்பாவும் மகனும் பேச்சுவார்த்தை கிடையாது என்று கூறினார்.

17.அதற்கு பதில் 5-7 -20 முதல் பிரிவினை ஆரம்பித்திருக்கும்,ஆமாம் இரண்டு மாதமாக பேச்சுவார்த்தை இல்லை.

18.2,5,8,11 இந்த இடத்தில் இவருடைய ஐந்தாம் பாவம் ஊழ்வினை கர்மாவை அனுபவிக்கிறார். 4-12-20 வரையிலும் அப்பாவும், மகனும் சற்று விலகி இருப்பது மிகவும் சிறப்பு என்று கூறி அனுப்பினேன்

ALP Astrologer

முத்துகிருஷ்ணன்

புதுக்கோட்டை

9751968103

ஓம் நமோ நாராயணாய நம :

சர்வம் கிருஷ்ணார்ப்பணம்!

ஜாதகம் பார்க்கப்பட்ட நாள்:06-09-2020

ஜாதகரின் வயது: 25 வருடம் ,11 மாதம், 17 நாள்

லக்னம்: ரிஷபம்,

லக்னம் புள்ளி :ரோகிணி ,

ரோகிணி நட்சத்திரம் லக்னத்திற்கு 11-ல்.

ALP லக்னம்: சிம்மம், லக்னம் புள்ளி: மகம் 1ஆம் பாதத்தில் (08.09.2019 - 08.09.2020) சூரியன் கன்னி வீட்டில்,உத்திரம் 2 .புதன் தனது கன்னி வீட்டிலேயே சித்திரை 2(செவ்)

ALP க்கு 7ல் சனி கேள்வி:ஜாதகரின் திருமண காலம் குறித்து,

நேரிடையாக,திருமணம் குறித்து கேள்வி கேட்டதனால், திருமணம் காலம் ஆராயப்பட்டது.

ஜாதகரின் நடப்பு திசா புதன் திசை 28.02.2016-19.2.2033 வரை நடப்பு புத்தி: சுக்கிர புத்தி 16 .07.2019 - 15.5 .2022 வரை சுக்கிரன் -ராகுவின் சுவாதி 3 நட்சத்திர சாரத்தில்

<u>திருமண காலம் எப்போது என பார்ப்பது?</u>

அட்சய லக்கனம் அல்லது அதற்கு 7ம் பாவகம்.ஜென்ம லக்னம் அதற்கு 7ம் பாவகத்தை நவாம்ச லக்னம் எப்பொழுது தொடுகிறதோ அப்பொழுது தான் திருமணம் நடைபெறும்.

ALP லக்ன புள்ளியான மகம் 1 ,நவாம்சத்தில் மேஷம் வீட்டில் அமைவதால்,இந்த காலம் முடியும் வரை திருமணம் நடைபெறாது.மகம்-2 ரிஷப வீட்டில், அதாவது ஜென்ம லக்னத்தை தொடும் காலமான 18- 10 -2020 முதல் 28 -11- 2021க்குள் திருமணம் நடைபெறும்.

புதன் திசை - சுக்கிர புத்தி -ராகு அந்தரம் காலம் - 20. 7 .2020 - 23. 12 .2020. லக்னத்திற்கு 7ம் பாவம் புள்ளி குருவின் வீட்டில், மூலம் கேது நட்சத்திரத்தில் அமைவதால் -கேது சூட்சம காலம் பொருந்தி வருமா என பார்க்கப்பட்டது.

19.10.2020 - 28.10.2020 .துல்லியமாக கணிக்கும் பொருட்டு ALPக்கு 7ல் உள்ள சனி அதி சூட்சம காலமாக கணக்கில் கொள்ளப்பட்டது.

25.10.2020 to 27.10.2020 இருப்பதால் 26.10.20திருமணம் அன்று உறுதியாக நடைபெறும் எனக் கூறப்பட்டது.

ஜாதகரின் தந்தை என்னுடன் பணிபுரிபவர்.அவர் திருமண நாளை முடிவு செய்துவிட்டு , என்னை சோதிக்க வந்த விஷயம் பிறகு தான் தெரிந்தது. யாம் குறித்த அதே தேதியில் அவர்கள் முகூர்த்தம் குறித்திருந்தனர்.

அட்சய லக்ன பத்ததி நமக்கு கொடுத்த அருளாளர் ஐயா, **திரு.பொதுவுடைமூர்த்தி** அவர்களுக்கும், அவ்வப்போது எழும் சந்தேகங்களுக்கு தெள்ளத்தெளிவாக விளக்கம் தரும்

சாந்திதேவி ராஜேஷ்குமார் அம்மையாருக்கும் மானசீக நன்றி தெரிவித்துக் கொண்டேன். இதை கணிக்க மிகக்குறுகிய காலம் எடுத்துக்கொண்டு 10 நிமிடத்தில் பதில் அளித்தபோது நண்பர் வியந்து போனார்.

எம்மை பற்றி: அடியேன் தொழில்முறை ஜோதிடன் அல்ல.இரண்டு மாத காலமாக தான் ஜோதிடம் படித்து வருகிறேன். **youtube**ல் எதேச்சையாக அட்சய லக்ன பத்ததி **onlineAstro TV**யில் ஐயா, **திரு. பொதுவுடை மூர்த்தி** அவர்களின் நிகழ்வில் பார்த்த பிறகுதான் அதில் ஆர்வம் ஏற்பட்டு மொபைல் மென்பொருள் வாங்கி (இரண்டு வாரம்தான் ஆகிறது) எனது திருமண காலம் கணித்து பார்த்தேன்.

மிக சரியாக பொருந்தி வந்தது, நேரம் சரி செய்யும் முறையும் மிக எளிமையாக இருந்தது.ஜோதிடம் கற்பவர்களுக்கு மிக எளிமையாக, மிக துல்லியமாக

காலம் கணித்து தரும் வகையில் மென்பொருளை உருவாக்கி கொடுத்துள்ளார். ஐயா அவர்கள்.

உலகம் முழுமைக்கும் மிக எளிய முறை அட்சய லக்ன பத்ததி முறை என்றால் மிகையல்ல.வாழும் காலத்து ஜோதிட மகானாவே ஐயா **திரு.பொதுவுடைமூர்த்தி** அவர்கள் எமக்கு தெரிகிறார். ஐயா அவருக்கும், சகோதரி **சாந்திதேவி ராஜேஷ்குமார்** அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகள்.

நன்றி..... வணக்கம்.

இவண்

M.இரவிச்சந்திரன்.

வேலூர்,

பணிபுரிந்து வரும் இடம்: கள்ளக்குறிச்சி.

உ
ALP ASTROLOGY
அட்சய லக்ன பத்ததி
அட்சய லக்னம்,
அட்சய ராசி அறிமுக வகுப்பு
2 நாட்கள் மட்டும்
03.10.2020 முதல் 04.10.2020
இடம்:
Yoga Maya Natural Health, 47c Alagesan Road, Sai Baba Colony,
Coimbatore 641011.
முன்பதிவு அவசியம்
9786556156 - 7010074415
ALPAIR
FOUNDATION
www.alpastrology.com
smoorthyjothidar@gmail.com

- ஜாதகர் பிறந்த தேதி 21.12.1963,
- நேரம் 7.00 am,
- திருத்தப்பட்ட நேரம்,
- ஊர் சென்னை.

ஜாதகர் என்னை தொடர்பு கொண்ட சமயம் ALP புள்ளி மிதுனம் மிருகசீரிஷ நட்சத்திரத்தில் . மிருகசீரிஷ நட்சத்திர அதிபதி செவ்வாய் கோச்சாரத்தில்(மிதுன alpக்கு ஆறாம் இடத்திற்குறியவன் 10இல்) மீனத்தில் .. பிறப்பு ஜாதகத்தில் குருவுடன் ..alp க்கு 10 ஆம் பாவத்தில் ..தொழிலில் கடன் இழப்பு என்று சொன்னேன் கோச்சரம் சரியாக வந்தது . அவர் அதை ஒப்புக்கொண்டார் . ஜாதகர் தனுசு லக்னம் லக்ன புள்ளி மூல நட்சத்திரம் 4ஆம் பாதம்

பிறக்கும்போதே விதி ஜாதகர் தன் ஊழ்வினை நோக்கிய பயணத்திற்காக லக்னத்தில் இருந்து d9 எட்டாம் பாவத்தில் அதாவது கடகத்தில் அனுபவம் ஏற்பட்டு பாவக்கடனை போக்க பிறந்துஉள்ளார் என்பது ஊர்ஜிதம் ஆகிறது .சுய கர்மாவை பிரதிபலிக்கிறது.

மேலும் கடகம் கால புருஷ லக்னத்திற்கு 4ஆம் பாவம் நிலம் சம்மந்தப்பட்ட விஷயங்களில் கஷ்டங்களை

அனுபவித்து தன் கடனை கழிக்க இந்த பிறவி எடுத்துள்ளார் என்பது லக்ன புள்ளி தெளிவாக பறை சாற்றுகிறது.மற்ற பாவங்களை பற்றியும் கால ஓட்டங்களை பற்றி விரிவாக அலசுவோம் .

லக்னாதிபதி குரு 4இல் மீன இராசி உத்திரட்டாதி நட்சத்திரத்தில் 4ஆம் பாதம் ., சனி மகரம் அவிட்ட நட்சத்திரம் 1ஆம் பாதம் ., செவ்வாய் லக்னத்தில் – தனுசு பூராடம் 2இல் ., புதன் லக்னத்தில் – தனுசு பூராடம் 4ஆம் பாதம் ., கேது லக்னத்தில்- தனுசு பூராடம் 2இல்., சூரியன் லக்னத்தில் – தனுசு மூலம் 2இல் ., சுக்ரன் 2இல் மகரம் உத்திராடம் 2 இல் . , சந்திரன் 3 இல் -கும்பம் அவிட்டம் 3 இல் .

<u>தந்தை மரணம்</u>

ஜாதகர் தந்தையை இழக்கிறார். Alp புள்ளி சதய நக்ஷத்திரம் 1ஆம் பாதம் புள்ளி தனுசுவகி பிறந்த லக்னத்தை காட்டுகிறது. கும்ப ராசிக்கு ஒன்பதாம் அதிபதி சுக்ரன் சூரியன் சாரத்தில் மகரத்திற்க்கு 8ஆம் இடத்திற்கு உரியவன் சாரம் அந்த சூரியன் சுக்கிரனுக்கு 12இல் கேதுவுடன் இராகு விற்கு சப்தமத்தில் . மேலும் சுக்ரன் சனியுடன் லக்னாதிபதி

ALPக்கு விரயதில் .

<u>படிப்பு</u>

அவர் சதய நட்சத்திர புள்ளி சென்ற போது அவருடைய அப்பா இறந்தவுடன் accounts சதய நட்சத்திர அதிபதி இராகு மிதுனதில் 2இல் குரு. பொருளியல் சார்ந்த கல்வியை ஜாதகரால் கற்க முடிந்தது.

வேலை

Alp பூரட்டாதி மூன்றாம் பாதம்.

Alp புள்ளி (கும்பம்) 7ஆம் இடதிற்குறியவன் சூரியன் 11இல் 10ம் அதிபதி செவ்வாய் உடன் சேர்க்கை குரு வின் வீடான தனுசுல் ஜாதகருக்கு அரசு வேலை கிடைக்கிறது.

திருமணம்

அதே வருடம் alp புள்ளி பூரட்டாதி 3 (d9 மிதுனம்) ஆவது பாதம் (கும்பம்) 7ஆம் இடதிற்குறியவன் சூரியன் 11 இல் நட்சத்திர அதிபதி குரு 2 இல் ஜாதகருக்கு திடீர் திருமணம் ஆகிறது .

குழந்தைகள்

முதல் குழந்தை

Alp புள்ளி பூரட்டாதி 4ஆம் பாதம் மீனத்தில் d9 கடகத்தில் முதல் பெண் குழந்தை ஜனனம் .

இரண்டாம் குழந்தை

Alp புள்ளி உத்திரட்டாதி 4 ஆம் பாதம் மீனத்தில் ., இதே நட்சத்திர பாதத்தில் குரு d9 புள்ளி விருச்சகத்தில் ஆண் குழந்தை ஜனனம்.

தொழில்

Alp புள்ளி ரேவதி நட்ச்திரத்தில் 4ஆம் பாதம் d9 மீனத்தில் part time இல் தொழில் ஆரம்பிக்கிறார். ரேவதி நட்சத்திரம் அதிபதி புதன் மீனத்திலிரிந்து 10 ஆம் இடம் தனுசுவில்

Alp மீனத்திலிருந்து.

Alpக்கு 4 ஆம் இடதிற்குரியவன் புதன் 10 இல் கட்டிட தொழில் .

Partnership

Alp மீனம் 7 ஆம் அதிபதி புதன் மனைவி partner ., 7 க்கு 3 ஆம் அதிபதி செவ்வாய் மனைவி யின் சகோதரன் partner .

மேஷத்தில் அசுவனி நட்சத்திரம் 4 ஆம் பாதம் d9 புள்ளி கடகம். கேது தனுசுராசியில் . ஜாதகர் வேலையை ராஜினாமா செய்து .தொழிலில் முழு நேரமாக இணைத்து கொள்கிறார் .

தொழிலில் பிரச்சினை

Alp புள்ளி கிருத்திகை நட்சத்திரம் 2 ஆம் பாதத்தில் ரிஷபத்தில் வரும் சமயம். கிருத்திகை நட்சத்திர அதிபதி சூரியன் ரிஷபத்தில் இருந்து 8ஆம் இடமான தனுசுராசியில் IT RAID நடந்தேறியது . இந்த நிகழ்வு இந்த ஜாதகரின் தொழில் சரிவுக்கு மிக முக்கிய காரணம் ரிஷபத்தில் கிருத்திகை நட்சத்திர பாதங்கள் கடனை பெருக்கி இருந்தது .

மேலும் ரோகிணி நட்சத்திர அதிபதி சந்திரன் 10 இல் சந்திரன் நின்ற சாரநாதன் 8 இலும் கடனோடு தொழில் சென்று கொண்டிருந்தது . ரிஷபத்தில் மிருகசீரிஷ நட்சத்திரத்தில் alp சென்ற சமயம் தொழிலில் மிக பெரிய நஷ்டம் . மிருகசீரிஷ நட்சத்திர சாரா நாதன் செவ்வாய் ரிஷபதிற்கு 8 இல் தனுசு ராசியில்.மேலும்

ரிஷபத்தில் alp புள்ளி செல்லும் சமயம் 2ஆம் அதிபதி புதன் ரிஷபதிற்கு 8 இல் இருப்பது பொருளாதார விஷயத்தில் மிகப்பெரிய சவாலை தொழில் சந்தித்தது.

தற்சமயம் மிருகசீரிஷ் நட்சத்திரம் 3 ஆம் பாதத்தில் alp சென்று கொண்டிருக்கிறது .

C K Sathyanarayanan

Chennai.

9940042415

அட்சய லக்ன பத்ததி ஜோதிட மென்பொருளின் சிறப்புகள்:



இந்திய ஜோதிட வரலாற்றில் மட்டுமல்ல, உலக ஜோதிட வரலாற்றிலேயே முதல் முறையாக இரண்டு தேதிகளை உள்ளீடு செய்து சரிபார்த்து பலன் காணும் ஒரு அற்புதமான ஜோதிட மென்பொருளைஉருவாக்கி அறிமுகப்படுத்திய பெருமை அட்சயலக்ன பத்ததி ஜோதிட முறையை உருவாக்கிய திரு.சி. பொதுவுடைமூர்த்தி சார் அவர்களையே சாரும் உலகில் வேறு எந்த ஜோதிட மென்பொருளிலும் இந்த அமைப்பு இல்லை. அட்சய லக்ன பத்ததியின் ஜோதிட முறையில் நாம் நடந்த விஷயங்களை எந்தளவுக்கு சரிபார்கிறோமோ அந்தளவுக்கு இனி நடக்க போகும் விஷயங்கள நாம் துல்லியமாக தேதி மாதங்களுடன் கூற முடியும்.

கடந்தகாலத்தை போய் பார்க்கக்கூடிய ஒரு அற்புதமான மென்பொருளை உருவாக்கி உள்ளார்.

பிறந்த தேதியை போட்டு நேரத்தை பதிவு செய்தால் நமது பிறப்பு ஜாதகம் வந்து விடும். அதன் கீழே உள்ள மற்றொரு Transit/Eventல் கடந்தகாலத்தில் நடந்த நிகழ்வுகளின் தேதியை பதிவு செய்தால்,

உதாரணமாக 2020-ல் நான் இருக்கிறேன். சில வருடங்கள் பின்னால் போய், 2012ல் போய் பார்பதற்கும், 2032 ல் போய் பார்பதற்கும் இந்த முறை எளிமையாக பயன்படும்.

இந்த கிரகங்கள் சம்பந்தப்படும்போது, இந்த நிகழ்வுகள் நடக்கும் என்பதை ஆய்வு செய்ய எளிமையாக இருக்கும்.

மென்பொருள் உபயோகிக்கும் முறைகள்:

அட்சய லக்ன பத்ததியின் மொபைல் சாப்ட்வேர் எப்படி உபயோகிக்கலாம் என்பதை பார்ப்போம்.முதல்ல ALP சாப்ட்வேர் ல முதல் பக்கத்தில் என்னென்ன இருக்கு

- ஜாதகம்
- பஞ்சாங்கம்
- உருவாக்கியவர் திரு. பொதுவுடை மூர்த்தி ஐயாவின் குறிப்புகள் இருக்கு

*பிரசன்னம் அப்படிங்கற ஒரு விஷயம் இருக்கு இதில் 120 க்குள், ஒரு நம்பரை போட்டால் அந்த நம்பருக்கு உண்டான அட்சய லக்கனம் வந்துவிடும் அந்த அட்சய லக்கினத்தை வைத்து பலன் கூறினால் அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம்

*திருமண பொருத்தம் பார்க்க ஆண், பெண் இருவரின் பிறந்த விபரங்களை பதிவு செய்தால் எத்தனை சதவீத % பொருத்தம் இருக்கும், என்பதும் ALP

பொருத்தம் உண்டா என்பதை அறியலாம்*Preferences ல் நம்முடைய மொழிகளை தேர்வு செய்து கொள்ளலாம்.தொழில்முறை ஜோதிடர்களாக இருக்கும்பொழுது ஜோதிடர்கள் பெயர் அப்படின்னு இருக்கும் இடத்தில நம்முடைய பெயரை பதிவுசெய்யவும்.

அடுத்து அயனாம்சம் லகரி &.சித்ர பக்ஷிசம். தேர்ந்து எடுத்துக்கொள்ளவும் அடுத்தது மொழி. 5 மொழிகள் இருக்கு ஆங்கிலம், மலையாளம், கன்னடம், இந்தி, தமிழ் எந்த மொழியை பயன்படுத்துறோமோ அதை தேர்ந்தெடுத்து கொள்ளலாம்.அடுத்தது இடம். இதை எல்லாம் கொடுத்து சரி கொடுதோம்னா எந்த மொழியில் பார்க்க போகிறோம் என்பது தேர்வாகிடும். ஜாதகம் இருக்கு இந்த ஜாதகத்தில் யாரைப்பற்றி பார்கிறோமோ அவருடைய பெயரை கொடுக்கலாம்.

உதாரணத்திற்கு ஒரு பெயர் குடுத்துட்டு, பிறந்த தேதி, பிறந்த நேரம் கொடுத்துட்டு, பக்கத்தில் உள்ள குறியீட்ல 24 மணிஇருக்கு, இதை அழுத்தினால், முற்பகல் (AM) பிற்பகல் (PM)என்பதை கொடுக்கவும், பிறந்த ஊர் எது என்பதை கொடுக்கவும்,அந்த ஊர் இல்லனா நமக்கு அந்த ஊர் Longitude, Lattitude கொடுத்து எந்த ஊர், எந்த மாவட்டம், எந்த நாடு, என்பதை கொடுக்க வேண்டும்.அதோட நேர வித்தியாச காலம் கொடுத்து தேர்வு கொடுக்க வேண்டும். கீழே ஆணா ,பெண்ணான்னு பதிவு செய்யவும்.

தேர்வு கொடுத்தோம்னா ஜாதகம் திறக்கப்படும். முதல்ல பிறப்பு குறிப்புகள்,காலம் அதிகாலை3 மணி

34நிமிடம் PM-னுகொடுத்திருந்தா அதில் 15.34 வந்திருக்கும்.அட்சய லக்கனத்தில் கடந்த கால நிகழ்வுகள் என்னஅப்படிங்கறது போட்டு நாம சரி பார்க்கலாம்.

நிறைய பேருக்கு திருமண நாள் எப்படி பார்ப்பது என்று தெரியவில்லை .அதை பார்ப்போம். இந்த ஜாதகத்துக்கு திருமண நாள் கொடுத்து transit event ஐ தொட்டால் நமக்கு ஒரு பக்கம் வரும்.முதல்ல வருஷத்தை கொடுக்கணும், மாதம் கொடுக்கணும், அடுத்து நாள் கொடுத்து தேர்வு செய்தால் ஒரு பக்கம் உருவாகும். Transit event ல நமது கடந்தகாலத்தில் நடந்த நிகழ்வுகளின் தேதிகளை பதிவு செய்தால் அன்றைய நாளில் அட்சய லக்னம் என்ன அதன் நட்சத்திர புள்ளி என்ன என்பதையும் அன்றைய நாளின் அட்சய ராசியின் தசாபுத்திகளும்,

கோட்சார, கிரகநிலைகளையும் தெரிந்துகொள்ளலாம் அதை வைத்து அந்த நிகழ்வுகளுக்கான காரணம் சரியானதா என்பதை ஆய்வு செய்துவிட்டால் இனி நடக்கப் போகும் நிகழ்வுகளையும் நாம் துல்லியமாக இந்த நாளில் நடக்கும், நடக்காது என்பதை அறுதியிட்டு கூறிவிடலாம். உதாரணமாக: ALP லக்கனம் ரேவதி நட்சத்திரம் 2ம் பாதம்.ரேவதி நட்சத்திரம் இரண்டாவது பாதம் நவாம்சத்தில் எங்கு வந்திருக்கும் என்பதை கவனிக்க வேண்டும் .புதனுடைய நட்சத்திரம் தனுசில் இருந்து ஆரம்பிக்கும் அதனால் ரேவதி 1ம் பாதம். மகரத்தில் 2ம் பாதம் ஆனால் தெரியாதவங்க இந்த

செயலியில் கீழ வந்தால் ஜாதகருடைய நவாம்சம் கீழே வரும்.இந்த நவாம்சத்தில் அட்சய லக்கன புள்ளி மகரத்தில் காண்பிக்கும் .மகரம் ஜென்ம லக்னத்தை தொட்டுச் செல்வதால் இந்த நேரத்தில் திருமணம் நடந்திருக்கும்.

இந்த இடத்தில் நாம் கொடுத்திருக்கும் பிறந்த தேதியின் அருகில் உள்ள மணி, நிமிஷத்தில் 3.25க்கு ரேவதி 1-ம் பாதம். வருகிறது அதை 3 நிமிடம் கூட்டி அதாவது 3.28க்கு ரேவதி 2ம் பாதம் திருமண நேரம் .இவ்வாறு ஒரு சில நிகழ்வுகளை பதிவு செய்து பிறந்த நேரத்தை சரி செய்ய வேண்டும் பின்பு now-னுகொடுத்தா இப்ப உள்ள அட்சய லக்னபுள்ளி நாள்கள் வரும்.

- **அடுத்து**

ராசி கட்டம் நமது பிறப்பு ஜாதக கட்டத்தில் நிறம் மாறியிருக்கும் கட்டங்கள் திதி சூன்யம் பெறும் ராசிகள் என்றும் , + குறியீடு யோகி, #குறியிடு அவயோகி, ( ) க்குள் இருக்கும் கிரகங்கள் வக்ரம் , *அஸ்தங்கம்,= சமபலம், என்பதை எளிதாக அறியலாம் கட்டத்திற்கு கீழ் ALP எந்த புள்ளியில் செல்லுது. என்பதை 405 நாள், 45 நாள், 5 நாள்,13 மணிநேரம் 1 மணி 29 நிமிடம் 10 நிமிடம் வரை ALP -ல கொடுத்திருக்கு.

- அடுத்து ஓரை
- அடுத்து தசா,புத்தி அந்தர, சூட்சும கிரகங்கள் இருக்கும்
- நட்சத்திரத்திற்குரிய பாதசாரங்கள்,

- அடுத்து நவாம்ச மண்டலம் இருக்கு. குண்டலினிக்கு

➢ **அடுத்து**

- பஞ்சாங்கம் இருக்கு

அதில் பிறந்த நாளின் விபரங்கள் அதாவது பிறந்த கிழமை, திதி,நட்சத்திரம், நாமயோகம், கரணம், நாம எழுத்துக்கள் வரும்.ராகுகாலம் ,எமகண்டம் ,குளிகை இது எல்லாமே வரும்.கீழே உதயாதி நாழிகை , அயனாம்சம் ,சூரிய உதயம் , சூரிய அஸ்தமனம்,

அடுத்து

- AB -அட்சய பாவகம். அட்சய பாவகத்தை எப்படி பயன்படுத்துவது என்பதை அடுத்த அட்சய லக்ன பத்ததி பாகம் 4 ல் அறியலாம்.

➢ **அடுத்து**

திசை

- அதில் ஒவ்வொரு உட்பிரிவாக தசா, புத்தி,அந்தரம், சூட்சுமம், அதி சூட்சுமம் என 5 பிரிவுகளாக பிரித்து எந்த தேதியில் தொடங்கி, எந்த தேதியில் எத்தனை மணிக்கு முடியும் என்பது வரை அறியலாம்

அடுத்து கோச்சாரம் பிறந்த ஜாதகத்தில் உள்ள அமைப்புகள் கட்டத்தில் கருப்பு நிறத்தில் இருக்கு.அதில் குறிக்கப்பட்டுள்ள சிவப்பு குறியீடுகள் கோச்சார கிரக நிலைகளை குறிக்கும் ஒவ்வொரு கிரகங்களுக்கும் ஒரு குறியீடு உண்டு. ☉ சூரியன், ☿

புதன் , ☿ குறியீடு கேது , ☄ குறியீடு குரு , ♄ சனிஸ்வரன் குறியீடு ♂ குறியீடு செவ்வாய் ☽ அன்றைய கோச்சார சந்திரன் ♀ சுக்ரன், ☊ராகு, கீழே எந்தந்த கிரகங்கள் எந்த நட்சத்திரத்துல இருக்கு. நேட்டல், கோட்சாரம் என இரண்டு பிரிவாக இருக்கும். எதிர்காலத்தில் வரக்கூடிய பலன்களையும் பார்க்கலாம். 10 வருடத்திற்கு முன்னாடி எப்படி இருந்தோம்- கிறதையும் நாம் பார்க்கலாம். காலத்தை போட்டு சரியான நிகழ்வில் பொருந்துதா? அப்படிகிறதையும் பார்க்கலாம்.. பஞ்சாங்கம் இன்றைய தேதியில் எப்படி இருக்கும் நாளைக்கு எப்படி இருக்கும்னு பார்க்காலாம். அதில் அன்றைய நாளின் விபரங்கள் அதாவது கிழமை, திதி, நட்சத்திரம், நாமயோகம், கரணம், நாம எழுத்துக்கள் வரும். ராகு காலம் ,எமகண்டம் ,குளிகை இது எல்லாமே வரும்.கீழே உதயாதி நாழிகை , அயனாம்சம் ,சூரிய உதயம் , சூரிய அஸ்தமனம், ஓரை உள்பிரிவு, பஞ்சபட்சிகாலம் போன்ற விபரங்கள் இருக்கும். அடுத்து *youtube Videos இருக்கு, *Trainning Videos

இருக்கு, அதில் 101 நிகழ்வில்வில் அட்சய லக்ன பத்ததி அடிப்படை வகுப்புக்கான பயிற்சி பாடங்கள் உண்டு.

அட்சய லக்ன பத்ததி ஜோதிட முறை மட்டும் அல்ல, மென்பொருளும் அள்ள, அள்ள, குறையாத அட்சய பாத்திரமே!

இந்த அரிய ஜோதிட பொக்கிஷத்தை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்திய வாக்கு யோகி

திரு.பொதுவுடைமூர்த்தி சார் அவர்களுக்கு என்றென்றும் நன்றியுடன்

ALP Astrologer

R.சாந்திதேவி ராஜேஷ்குமார்

7010074415 - 9786556156

(அட்சய லக்ன பத்ததி ஜோதிடர் என்பதில் பெருமை கொள்கிறேன்)


திரு. சி.பொதுவுடை மூர்த்தி
பெற்றோர் : ப.சிங்காரவேல், சி.பத்மாவதி
முதுகலை தமிழ், இளங்கலை கல்வியல், முதுநிலை ஜோதிடம் முனைவர் பட்ட ஆய்வாளர் (ஒலைச்சுவடி) ஜோதிடவியல் ஆராய்ச்சியாளர்,
அட்சய லக்ன பத்ததி உருவான விதம் ஒரு முறை இமயமலை சென்றிருந்தபோது ஒரு ஆலமரத்தடியில் அமர்ந்திருந்த சமயம் அந்த மரத்தின் விழுதுகள் கண் முன்னே ஆடியது அதன் வேர் வளர்வதை பார்த்தபோது வளர்தல் என்ற சொல் அவருள் ஒரு புதிய மாற்றத்தை உண்டாக்கியது அந்த ஆலம் விழுதுதான் அட்சய லக்ன பத்ததியின் முதல் விதை. அதன் பிறகு அவரது ஆய்வு ராசி (மனம்) வரும் போது லக்னம் (உடல்) மட்டும் ஏன் வளராது, அதை நகர்த்தி பார்த்து பலன் எடுத்தால் என்ன என்கிற கேள்வியின் பதில் தான் ALP.
4 வருடத்திற்கு முன்பு ஆழ்நிலை பயிற்சி மூலம் கடந்த காலத்தை அறிவது போல் எதிர்காலத்தில் ஜோதிடத்தின் மாற்றம் எப்படி இருக்கும் என்று பார்த்தபோது 2019 ல் ALP அட்சய லக்ன பத்ததி முறையில் பலன் சொல்வதாக தோற்றம் கண்டார், அதன் பிறகே இவரது ஆய்வை தீவிரமாக மேற்கொண்டு மரபு ஜோதிடத்தை விஞ்ஞான ரீதியாக இன்றைய கால நிலைக்கு ஏற்ற வகையில் லக்கன புள்ளியை நகர்த்தி ALP அட்சய லக்ன பத்ததி முறையை உருவாக்கி பலன் செல்வதில் வெற்றி பெற்று, இந்த ALP முறை ஜோதிடர்களுக்கு மட்டும் அல்லாது அனைவருக்கும் பயன்படும் வகையில் எளிமையாக்கி நூலாக்கம் செய்து ஜோதிட உலகிற்கு அறிமுகப்படுத்துகிறார்
ISBN 818446947-0
9 788184 469479
Rs. 120/-
ரெய்கி, பிராணிக், ஹீலிங் போன்றவற்றில் தேர்ச்சி பெற்று, கடந்த கால நிகழ்வுகளை ஆழ்நிலை பயிற்சி மூலம் ஆய்வு செய்து சிகிச்சை அளிப்பவர். புகழ் பெற்ற விஜய், ஜீ தமிழ், ஜெயா பிளஸ், வேந்தர், புதுயுகம், மூன் போன்ற தொலைக் காட்சிகளில் புகழ் பெற்றவர். ஜோதிடத் துறையில் பல விருதுகளை பெற்றுள்ளார்.
விஜயா பதிப்பகம் ★ அட்சய லக்ன பத்ததி ★ சி.பொதுவுடைமூர்த்தி
விஜயா பதிப்பகம்
3-10-68
3.45 AM
இராசி
அட்சய
ல
அட்சய லக்ன பத்ததி
பாகம்-1
சி.பொதுவுடைமூர்த்தி


திரு.சி.பொதுவுடைமூர்த்தி
பெற்றோர் : ப.சிங்காரவேல் – சி.பத்மாவதி
முதுகலை தமிழ், இளங்கலை கல்வியல், முதுநிலை ஜோதிட முனைவர் பட்ட ஆய்வாளர் (ஒலைச்சுவடி) ஜோதிடவியல் ஆராய்ச்சியாளர்,
தமிழ்நாட்டின் கடைக்கோடி ஆன வேதாரண்யத்தில் பிறந்து இந்தியாவின் கடைக்கோடியான இமயமலையின் அடிவாரத்தில் முருகனை வழிபட்டு, ஆஞ்சநேயரின் அருளால் நீம் கரோரி பாபாஜி சன்னிதானத்தில் அமர்ந்து தியானம் செய்யும் போது தோன்றிய நிகழ்வே அட்சய லக்ன பத்ததி நூலின் அடித்தளமாக அமையப் பெற்றது
அட்சய லக்னம் முதல் நூல், உடலின் அமைப்பான லக்னப்புள்ளி நகர்ந்து செல்லக்கூடிய காலத்தையும், உடல் ரீதியாக ஏற்படக்கூடிய மாற்றங்களையும் குறிக்கக்கூடியது
"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" என்பது போல்
அட்சய ராசி எனும் இரண்டாம் பாகமான இந்நூல் உடலின் வளர்சியும், மனதின் வளர்ச்சியும் எவ்வாறு சேர்ந்து இயங்கும் எனபதை ஆய்வு செய்யும் நூலாகவும் ஜோதிடர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவும் அமைந்தது
ரெய்கி, பிராணிக், ஹீலிங் போன்றவற்றில் தேர்ச்சி பெற்று, கடந்த கால நிகழ்வுகளை ஆழ்நிலை பயிற்சி மூலம் ஆய்வு செய்து சிகிச்சை அளிப்பவர் புகழ்பெற்ற விஜய், ஜீ தமிழ், ஜெயா பிளஸ், வேந்தர், புதுயுகம், மூன் போன்ற தொலைக்காட்சிகளில் புகழ் பெற்றவர். ஜோதிடத் துறையில் பல விருதுகளை பெற்றுள்ளார்.
புலம்
ISBN 978-81-9078-55-2-6
அட்சய லக்ன பத்ததி (பாகம்-2) சி. பொதுவுடைமூர்த்தி
அட்சய லக்ன பத்ததி
பாகம்-2
சி. பொதுவுடைமூர்த்தி

ALP BOOK AVAILABLE PLACES

- **Vijaya publications coimbatore - 0422 2385614**
- **pulam publications chennai – 9840603499**
- **Centaram Books - Nagercoil - 8870364620**
- **Jayam Book Centre - Madurai - 9894658036**
- **Jayasree Book Centre - Kumbakonam – 9952882002**
- **Odyssey - Adyar - 044-24402264 / 65**
- **Odyssey - Thiruvanmiyur - 044-42037799**
- **Odyssey - Coimbature - 0422-2255199, 2255299**
- **Mary Martin Book Centre - Coimbature – 7598907381**
- **Vijaya Pathippagam - Coimbature – 7373787063**
- **Amutham Bookshop - Mettupalayam – 9486411900**
- **Paalam Bookshop - Salem – 9894784387**
- **Vallalar Bookshop - Salem – 9080498756**
- **Vallalar Bookshop - Erode – 7010047966**
- **New Booklands - T.Nagar - 044-28156006**
- **Wecan Books - T.Nagar – 8778696612**
- **Panuval Bookshop - Thiruvanmiyur – 9789009666**
- **Discovery Book Palace - K.K.Nagar – 8754506060**
- **Noolangadi – 9262037307**
- **Giri Trading Bookshops (BOOK SHOP ALL)**

Available in websites:

marinabooks.com | udumalai.com | discoverybookpalace.com
panuval.com | Commonfolks.in | wecanshopping.com



அன்பே சிவம், அன்பே ஆனந்தம்,

அன்பே வாழ்க்கை,

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க.

அட்சய லக்ன பத்ததி ஜோதிட முறையில் அட்சய ராசி என்ற இரண்டாவது நூல் வெளிவந்துள்ளது.

இந்த அட்சய லக்ன பத்ததியில் லக்கனம் வளரக்கூடிய தன்மைகளும், ராசி வளர்ந்து அதனுடைய பலன்கள் எப்படி இருக்கும் என்ற தன்மைகளும் இரண்டாவது புத்தகத்தில் வெளியிட்டுள்ளேன்.

அட்சய லக்ன பத்ததியில் ஒருவருக்கு எப்படி பலன் பார்க்கப்படுகிறது?

லக்னம் மேஷ லக்னம், அவருடைய 30 வயதில் மிதுன லக்னம்,மிதுன லக்னத்திற்கு தசாபுத்தி பார்க்கணும்.

இன்றைக்கு நடக்கக்கூடிய தசாநாதன் ,புத்தி நாதன் எங்கிருந்து இயக்குகிறார் என்பதை பார்க்கணும். இதுதான் நம்முடைய அட்சய லக்ன பத்ததி பார்க்கப்படுவது.

இதை வைத்தே ஜாதகத்தை ஆய்வு செய்யலாம்.

உதாரணமாக, மிதுன லக்னத்திற்கு ராகு திசை நடக்கிறது. பிறந்த கன்னி ராசி. இன்றைக்கு துலாம் ராசியில் அட்சய ராசி இயங்குகிறது.

ராகு திசை அட்சய லக்னத்திற்கு 5ம் வீட்டை இயக்குகிறது. ஆனால் இந்த ராகு பகவான் ,உதாரணமாக அட்சய லக்கினத்திற்கு 11ல் நிற்கிறது.

அவர் எதிர்பார்த்த யோகங்கள், எதிர்பார்த்த விஷயங்கள் எல்லாமே பெரிய பிரம்மாண்டத்தை கொடுத்திருக்கும்.

மிதுன லக்னத்திருந்து 5ம் இடத்தை சுவாதி நட்சத்திரத்தில் இருந்து ராகு தசை இயக்குகிறது. தசை நாதன் ராகு 11-ல் இயக்குறார். கோடி கோடியான செல்வம் கோடி கோடியான பிரம்மாண்டத்தை கொடுக்கக்கூடிய காலமாக இது அமைகிறது.

30 வயதிற்குள்ளேயே இந்த ஜாதகருக்கு பெரிய கோடிஸ்வரன் ஆகும் வாய்ப்பு உள்ளது.

குருதிசை வரக்கூடிய காலகட்டத்தில் முதல் மூன்று பாதங்கள் விசாகம்1, விசாகம்2, விசாகம்3, செல்லக்கூடிய காலகட்டத்தில்

3,6க்குடையவன் ராசியிலிருந்து லக்கனம் கடக லக்கனம், ஆக மாறுகிறது. கடக லக்கினத்திற்கு 6ம் வீட்டில் குருபகவான் நடத்துவார்.

குருபகவான் கடக லக்கினத்திற்கு 9ம் வீட்டிலிருந்து நடத்துவார்.இதனால்

எதிர்பாராத யோகம் உண்டாகும்.நாலைந்து கட்டிடங்கள் கட்டி பெரிய கோடீஸ்வரனாக வாழ்வார். மேஷ லக்னம் ஜென்ம லக்னம் ,ALP லக்னத்திற்கு 12ல் குரு. அதனால் யோகத்தை செய்யாது.

கடக லக்னத்தில் 9ம் இடத்தில் இருந்து குரு, தசாநாதன் யோகத்தை கொடுப்பார் என்பது தான் அட்சய லக்ன பத்ததியில் என்னுடைய ஆய்வு.

ஒவ்வொரு காலமும் மாற மாற, வயது மாற மாற ,அவர்களுடைய வாழ்க்கை ஒரு மாற்றத்தை கொடுக்கும்.

வயது மாற்றம் கொடுக்கும்போது அட்சய லக்னம் அதற்கு தகுந்தார்போல் பலனை கொடுக்கும்.

- 20 வயதில் சுக்கிர திசை வருவதற்கும்,
- 60 வயதில் சுக்கிர திசை வருவதற்கும்,
- 80 வயதில் சுக்கிர திசை வருவதற்கும் யோகம் உண்டு.

ஒருவருக்கு 40 வயதில் சுக்கிர திசை வரும் பொழுது ஓரளவு வளர்கிறார். 80 வயதில் கோடீஸ்வரன் ஆகிவிடுகிறார்.

மிகப்பெரிய மாற்றத்தை கொடுக்கக்கூடியது இந்த அட்சய லக்கனம், எங்கிருந்து யார் இயக்குகிறார் என்பதுதான்.

அட்சய லக்னத்திற்கு அடுத்த அதிபதி யார் இயக்குகிறார். உதாரணத்திற்கு கடக லக்னத்திற்கு அடுத்த 10 வருட அதிபதி சந்திரன். அதனால் யோகமாக இருக்கும்.அதற்குள் இருக்கக் கூடிய நட்சத்திரங்கள் புனர்பூசம் ,பூசம், ஆயில்யம். இந்த மூன்று நட்சத்திரங்களின் நட்சத்திர அதிபதிகள் பலமாக அமையவேண்டும். குரு,சனீஸ்வரன், புதன்.இந்த 3 கிரகங்களும் பலமாக அமைந்தால் மிகப்பெரிய யோகத்தைக் கொடுக்கும், மிகப்பெரிய மாற்றத்தை கொடுக்கும்.

மூன்று கிரகங்களும் சந்திரனுக்கு 6 ,8 , 12ல் மறைந்தால் 1 வருடம், 1 மாதம், 10 நாள் இந்த ஜாதகருக்கு யோகத்தை கொடுக்காது.

எந்த பாதையில் அதிகமா வெற்றி கிடைக்கும் என்பதை அடுத்த நிகழ்வில் பார்ப்போம்.

நல்லதொரு நிகழ்வே அமையட்டும்.

நன்றி ,வணக்கம்.

கட்டுரை தொடர்பான நிகழ்வில்
https://alpastrology.com/blog/ என்ற
இணையத்தளத்தில் பார்க்கலாம்.

https://youtu.be/fBQLemFc-vE



<u>அன்பே சிவம், அன்பே ஆனந்தம் ,</u>

<u>அன்பே வாழ்க்கை,</u>

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க.

இன்றைக்கு நிறைய விஷயங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிகழ் காலத்தில் நிறைய பேர் தன்னுடைய பயணம் உடைமைகளை தூக்க முடியாமல் ரொம்ப கஷ்டப்பட்டு தூக்கிக் கொண்டு வந்தனர்.இது பொருள் சார்ந்த மூட்டை, பொருள் சார்ந்த மூட்டையை தூக்கிக் கொண்டு நம்மால் ரொம்ப தூரம் பயணிக்க முடியவில்லை.

அருள் சார்ந்த மூட்டை என்பது நம்முடைய மனம்.

நம்முடைய வாழ்க்கையில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நம்முடைய உயிர் பிரிந்து செல்லும் பொழுது,எண்ணங்களும் நிறைவேறாத ஆசைகளும் தூக்கிக் கொண்டு இன்னொரு லோகத்திற்கு செல்லும் பொழுது மிகப்பெரிய அளவில் கஷ்டப்படுவார்கள்.

சில விஷயங்கள் வேணும், வேண்டாம், நம்புகிறோம், நம்பல இதுதான் உண்மை.

நம் ஜோதிட முறையில் அடைப்பு நட்சத்திரம் என்று சொல்வார்கள்,

அதற்கு 45 நாள் விளக்கு ஏற்றி பரிகாரம் சொல்லுவார்கள்.

சுமையுடைய மூலாதாரம் எங்கிருந்து ஆரம்பிக்கும் என்றால் நம்முடைய ஆசைகள் தான்.நான் பார்த்த நான் கேட்ட அத்தனை விஷயங்களும் ஆசைகளில் இருந்து தான் ஆரம்பமாகிறது.ஆசைகள் தான் அடிப்படைக் காரணம் அதிலிருந்து பரிணமித்து இன்பமாக, துன்பமாக ,நல்லதாக, கெட்டதாக, பயணமாக,வாழ்க்கையாக, நோய்நொடி யாக, வருமானமாக,சந்தோஷமாக உள்ளது.

மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது மனம் சந்தோஷமாக இருக்காது, அதுவே சங்கடமாக உள்ளபோது மனம் ரொம்ப இறுக்கமாக இருக்கும்.இதனுடைய மூலாதாரம் ஆசை.

இந்த ஆசைகள் உடைய தன்மைகள் ஒவ்வொரு பயணம் முடியும் பொழுது அந்த மூட்டைகளை தூக்கும் பொழுது தான் நமக்கு தெரியும். ஒண்ணுமே இல்லாத விஷயத்திற்கு தான் நாம் இவ்வளவு நாள் ஆசைப்பட்டுள்ளேன்.ஒன்றுமே இல்லாத விஷயத்திற்கு தான் சுமைகளாக சுமந்து கஷ்டப்பட்டு உள்ளோம்.

வாழ்க்கையின் சுமைகளை எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்கிறோமோ வாழ்க்கையில் மாற்றம் உருவாகும்.

எனக்கு தெரிந்த நிறைய நண்பர்கள் உடல் சார்ந்தும், மனம் சார்ந்தும் நிறைய மூட்டைகளை சுமக்கிறோம்.

நமக்கு ஒரு நாளைக்கு 60 ஆயிரம் எண்ணங்கள் தோன்றி மறைகிறது.நம்முடைய எல்லா எண்ணங்களும் ஒரு மூட்டையாக கட்டி கட்டி வைத்துள்ளோம்.அதனுடைய ஆரம்பமும், முடிவும் ,அன்றைய நாள் இரவில் முடியும் பொழுது மன இறுக்கங்களும், சங்கடங்களும், சார், எனக்கு இரவு சரியாக தூக்கம் வரவில்லை என்று சொல்வார்கள்.

எப்படி தூக்கம் வரும். மனது முழுவதும் அடைத்து வைத்துள்ளோம்.

காலையில் இருந்து இந்த இரண்டு விஷயங்களை முக்கியமாக கவனிக்கணும். காலையில் மனித உடலின் கழிவுகள், **மலம்** என்று சொல்லக்கூடிய கழிவுகள்.இரவில் **மனம்** சொல்லக்கூடிய எண்ணங்கள்.

இந்த இரண்டையும் சுத்தப்படுத்தினால் தான் நம் வாழ்க்கை வாழ முடியும்.

உணவு உண்பது, எண்ணங்களை தூண்டுவது ,இது நம் வாழ்க்கையில் மறுக்க முடியாதது.மறைக்க முடியாது ஏற்றுக்கொண்டுதான் ஆகணும்.

தேவையான விஷயத்துக்கு மட்டும் பயணிக்கணும், தேவையான விஷயத்தை மட்டும் பார்க்கணும்.

சுமையை நிறைய தூக்கி சுமந்தால் கண்டிப்பாக உடலும், மனமும் பாதிக்கப்படும்.

சுமையை தூக்கி சுமந்தால்

நெடுந்தூரத்திற்கு பயணிக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுமைகள் வரலாம்.

வாழ்க்கை பயணத்தில்நிறைய சுமைகளை தூக்கி,

அந்த சுமைகள் நம்முடைய ஆசைகள்.

எல்லாவற்றிற்கும் ஆசைப்படலாம். ஆனால், உங்கள் மனம் விரும்பக் கூடிய ஒரு விஷயத்தை மட்டும் தான் அடைய முடியும்.அந்த ஒரு விஷயத்தில் மட்டும் புரிந்து இன்னும் ஆசைப்பட்டால் சந்தோஷமாக இருக்கும்.

10 பொருள்கள் ஆசைப்பட்டு வாங்க முடியாது.

அதே போல் 10 பாதைகளில் உங்கள் வாழ்க்கை செல்ல முடியாது. அந்த ஒரு பாதையில் தான் செல்ல முடியும்.அந்த ஒரு பாதையை முழுவதுமாக அடைந்து விட்டு, மறு பாதையில் செல்லலாம்.

எல்லாவற்றிற்கும் ஆசைப்பட்டால் எந்த பாதையிலும் செல்ல முடியாது.

ஆசைகளும் சுமைகளும் வாழ்க்கையின் இரு கண்கள்.இதை இரண்டையும் சரியாக பயன்படுத்தி,சந்தோஷமாக சென்றால் என்னுடைய

ஆசைகளும் நிறைவேறும், என்னுடைய எண்ணங்களும் நிறைவேறும். இதன்படி சென்றால்

வாழ்க்கைப் பயணத்தில் வெற்றியை அடைய முடியும் என்பதுதான் என்னுடைய வாதம்.

அடுத்தவங்க பாதையில் நாம் பயணிக்க முடியாது.

சுமைகளை தேவையான அளவு தூக்கி வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி பெற வேண்டும்.நல்லதொரு நிகழ்வே அமையட்டும்.

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்.

நன்றி, வணக்கம்.

கட்டுரை தொடர்பான நிகழ்வில்
https://alpastrology.com/blog/ என்ற
இணையத்தளத்தில் பார்க்கலாம்.

https://youtu.be/z2ymsfgoONk

அனைவருக்கும் வணக்கம்,

அட்சய லக்ன பத்ததியில் பிரசன்னம் எப்படி பார்பது?

வந்திருக்கவங்க கேள்வி எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டும்

உதாரணமாக சித்திரை, வைகாசி, ஆனி ,ஆடி மாதம் சூரியன் எங்கே இருக்கும்?

பிரசன்ன லக்னம் ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கும் லக்னம் மாரும், உதாரணமாக மென்பொருளில் 1' முதல்.

120 குள் எதாவது ஒரு எண்,

உதாரணத்திற்கு அவர் சொன்ன எண் 46, வயது, 46 நம்பர் இரண்டையும் எடுத்துக்கொள்ளலாம். 46 வயது எடுத்தேன். ஒரு வயது 3' நகரும். 12 ராசி கட்டங்களின் மொத்த அளவு 360'

ஒரு மனிதனுடைய ஆயுள் காலங்கள் தசா வரிசைகள் 120.

360/120 அதாவது ஒரு வயதுக்கு நம்முடைய உடல் 3' பெருக்கம் அடைகிறது.

இதுதான் நம்முடைய அட்சய லக்னம்.

46 x 3 = 138'

அவருடைய லக்னம் நகர்ந்திருக்கிறது. நாம் இரண்டு முறையில் பிரசன்னம் பார்க்கிறோம்.

போன ஜென்மத்தில் நம்முடைய உடல் அழிந்த பகுதியிலிருந்து இப்பொழுது ஆரம்பிக்கப் படுவதை லக்னம் என்கிறோம்.

சூரியனுடைய ஆத்ம கிரகம் எங்கிருந்து அழிக்கப்பட்டதோ அங்கிருந்துதான் தொடங்கும். ரிஷப லக்னத்தில் 8' மீதம் இருக்கும்.ஒரு நட்சத்திர பாதத்தில் 3, 20 பாகை 6,40 பாகை லக்னப்புள்ளி செல்லும்.

கார்த்திகை 4ம் பாதம் லக்கனத்திலிருந்து ALP லக்னம் என்ன என்பது தான் கேள்வி, 6 என்றால் கடன், வம்பு, வழக்கு, நோய் நொடி சம்பந்தப்பட்டது உருவாகும். சூரியன் பலமான நட்சத்திரம் என்பதால் 1, 2, 3, 4, வீடு, இடம், பொருள், சொத்து வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்டது. சூரியன்எங்கு உள்ளதோ அங்குதான் பிரச்சனை உண்டாகும். ALPலக்னத்திற்கு சூரியன் 3-ம் இடத்தில் உள்ளது.

3ம் இடம் சகோதரம், அதாவது 3, 8,11 சம்பந்தப்படும் பொழுது சகோதர வழியில் இதன் பிரச்சனை உண்டாகும். ஒரு பங்கு பிரித்தால் பிரச்சனை தீரும். கார்த்திகை முடிந்து ரோகிணி நட்சத்திரம் வந்தால் கண்டிப்பாக மாற்றம் உருவாகும். 1 டிகிரி 4 மாதம். 8 மாதம் பிரச்சனையாக இருக்கும். வீடு வாங்கினால் விரயம் ஏற்படும். விற்றாலும் பணம் சரியாக கிடைக்காது. கேட்கக் கூடிய நேரத்தில் கேள்விக்கான பதில் கொடுக்கனும். இப்படி சில விஷயங்களை

அட்சய லக்ன பத்ததியில் ஆய்வு செய்கிறோம்.

பிரசன்னம் முறையில் ஆய்வு செய்கிறோம்.

ஒவ்வொரு காலகட்டத்திற்கும் அட்சய லக்ன

பத்ததியின் மென்பொருளில் இந்த விஷயங்களை, கூட்டி உள்ளோம். மீண்டும் ஒரு இனியதொரு நிகழ்வில் சந்திப்போம். நன்றி, வணக்கம்.

கட்டுரை தொடர்பான நிகழ்வில்
https://alpastrology.com/blog/ என்ற
இணையத்தளத்தில் பார்க்கலாம்.

https://youtu.be/tQwoa9hmZQo

அன்பே சிவம் ,அன்பே ஆனந்தம்,

அன்பே வாழ்க்கை,

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க.

நான் பாசக்காரன். பாசத்தை பற்றி இன்று உங்களுடன் பேச வந்துள்ளேன்,

பாசம் என்பது உயிருள்ள பொருள்கள்மீது மட்டுமில்லை, உயிரற்ற பொருட்களின் மீதும் பாசம் வைக்கணும். அதை தான் கூறுகிறேன்.

பொருட்களை இது உயிருள்ளது உயிரற்றது என பிரிக்க வேண்டாம் எல்லா உயிர்கள் மீதும் அன்பு

செலுத்துங்கள்.கண்டிப்பாக வாழ்க்கை சந்தோஷமாக அமையும்.

இது உயிரற்றது ,உயிர் உள்ளது என்று ஒவ்வொரு பொருட்களை நாம் சொல்கிறோம். ஆனால் அதில் ஒவ்வொன்றுக்கும் உயிர் உண்டு.

வாழ்க்கையில் நாம் எப்படி இயங்குகிறோமோ அதேபோல்தான் வாகனங்களும் இயங்குகிறது.

நான் ஒவ்வொரு தடவையும் வெளியில் செல்லும் பொழுது வீட்டை தொட்டு வணங்கி விட்டு தான் செல்வேன். அது எனக்கு வீடு கையசைத்து போய்ட்டு வா என்று கூறுவது போல் இருக்கும்.

தேவையான பொருள், தேவையற்ற பொருள் என்ற விஷயத்தை விட நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தனை பொருட்களுக்கும் ஒருமுறை நன்றி சொல்லுங்கள்.

நீங்கள் நன்றி சொல்லும் பொழுது ஒரு பாசம், ஒரு இணைவு உங்களை அடுத்த கட்ட பரிணாமத்திற்கு அழைத்து செல்லும்.

உங்கள் பேனா உங்கள் சட்டைப்பையில் இருப்பதற்கு நன்றி சொல்லுங்கள். அதன்பிறகு நீங்கள் போடும் ஒவ்வொரு கையெழுத்தும், வெற்றி பயணத்திற்கான கையெழுத்தாகும்.

நான் ஒவ்வொரு நாளும் காலையில் விழித்தவுடனும், தூங்க செல்வதற்கு முன்னும் பஞ்சபூதங்களுக்கு நன்றி சொல்வேன். கடவுளுக்கும் நன்றி சொல்வேன்.

பஞ்சபூதம் ஆன இந்த உடல் எல்லாவற்றின் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்பது என்னுடைய ஆனந்தமான வார்த்தை.

நீங்கள் ஆனந்தமாக வாழ வேண்டுமென்றால் முதலில் நன்றி சொல்லுங்கள்,

கை தட்டுங்கள்,சந்தோஷமான ஒரு நிகழ்வை கொடுக்கும் .உங்கள் வாழ்க்கை மாறும்.

உணவு சாப்பிடும் பொழுது இந்த உணவை தொட்டு நன்றி சொல்லுங்கள். அந்த உணவு உங்களுக்கு வாழ்க்கையில் ஒரு சக்தியாக அமையும்.உடலுக்கு மருந்தாக சென்று உடலும் மனமும் சந்தோஷமாக இருக்கும்.

வாழ்க்கையில் எல்லா பொருட்களின் மீதும் அன்பு செலுத்துங்கள். இது வேண்டும், இது வேண்டாம் என நினைக்க வேண்டாம்.உங்களுடைய தேவையான பொருளுக்கு ஒவ்வொரு முறையும் நன்றி சொல்லுங்கள். வாழ்க்கை கண்டிப்பாக மாறும்.

ஒரு நாள் 10 பொருட்களுக்கு நன்றி சொல்லுங்கள். அடுத்த நாட்கள் 20 பொருள்கள் உங்கள் கண்ணில் படும்.

தொலைத்தொடர்பு கோபுரங்கள் அதற்கு ஒரு நன்றி சொல்லுங்கள்.அதன் பிறகு உங்களுக்கு போன் வந்தால், அந்த இணைப்பு துண்டிக்கப் படாமல் வரும்.

இது என்னால் உணர முடிந்த ஒரு விஷயம்.

எல்லா பொருட்களின் மீதும் அன்பு செலுத்துங்கள்.

ஆனந்தமாக வாழ்வதற்கு எல்லா பொருட்களும் துணையாக இருக்கும்.

நல்லதொரு நிகழ்வே அமையட்டும் நன்றி, வணக்கம்.

கட்டுரை தொடர்பான நிகழ்வில்
https://alpastrology.com/blog/ என்ற
இணையத்தளத்தில் பார்க்கலாம்.

https://youtu.be/cRpv-GzlSPI

அன்பே சிவம், அன்பே ஆனந்தம் ,

அன்பே வாழ்க்கை,

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க. இன்று ஒரு விஷயம் சொல்கிறேன்.

இந்த விஷயத்தை வாழ்க்கையை நீங்கள் கடைபிடித்தால் கண்டிப்பாக 100% வெற்றி உங்களுக்கு.

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

உங்களுடைய கர்மாவை கழிக்க,

உங்களுக்கு தெரிந்த விஷயத்தை யாருக்காவது ஒருவருக்கு சொல்லிக் கொடுத்து விடுங்கள். அந்த குரு உபதேசத்தை கண்டிப்பாக சொல்லிக் கொடுத்து விடுங்கள்.

உங்களுக்கு தெரிந்த ஒரு விஷயத்தை அறிவுரை மூலமாகவோ, கலந்துரையாடல் மூலமாகவோ மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுத்து விடுங்கள்.அப்படி சொல்லிக் கொடுப்பதால் உங்களுடைய வாழ்க்கை 100% கண்டிப்பாக மாறும்.

உங்களுடைய கர்மாவை கழிக்க மிகப்பெரிய ஆயுதம் என்னவென்றால் நீங்கள் குருவாக மாறுவது 'இல்ல,குருவாக உங்களை நீங்களே தயார்படுத்திக் கொள்வது இதுதான் உங்கள் வாழ்க்கையை மாற்றும்.

உங்களுக்கு தெரிந்த ஒன்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் உங்கள் வாழ்க்கை மாறும். உங்களை சார்ந்த நண்பர்கள் உடைய வாழ்க்கை மாறும்.

உங்களுடைய கர்மாவும் கழியும்.

நல்லதொரு நிகழ்வு அமையட்டும், உங்களுடைய வாழ்க்கை சந்தோஷமாக மாறும்.

உங்களுக்கு தெரிந்த ஒரு விஷயத்தை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள்.கண்டிப்பாக உங்கள் வாழ்க்கை மாறும்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று".

எனக்கு தெரிந்த சின்ன விஷயத்தை ,எனக்கு ஜோதிடம் நன்றாக தெரியும். ஜோதிடத்தில் முன்ஜென்மம் எனக்கு மிகவும் நன்றாக தெரியும்.கேக்குறாங்க ,கேட்கல,புரியுது, புரியல'நான் சொல்லிட்டேன், என்னுடைய வெற்றிக்கு இதுவும் ஒரு ஏணிப்படி.

என்னுடைய வெற்றிக்கு இதுவும் ஒரு ஏணி படியாக அமையட்டும்.

நன்றி, வணக்கம்.

கட்டுரை தொடர்பான நிகழ்வில்
https://alpastrology.com/blog/ என்ற
இணையத்தளத்தில் பார்க்கலாம்.

https://youtu.be/2UTeHcSvqCw

01.10.2020
இதழ்-02

அதிர்ஷ்டத்தை அறிவதற்கு

அட்சய லக்ன பத்ததி

ஆசிரியர் : சி.பொதுவுடைமூர்த்தி

www.alpastrology.com | ALPAIR FOUNDATION
smoorthyjothidar@gmail.com | Sasti Tv | ALP Astrology
+91 7010074415 | +91 9786556156